©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R.Dis. No. 197/2009
[Price: Rs. 4.00 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 31] CHENNAI, WEDNESDAY, AUGUST 8, 2012
Aadi 24, Thiruvalluvar Aandu–2043

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

*Pages.*

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

பணிக்குழு—தொழிலாளர் துறை—தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி—முத்திரைக் கொல்லர் பதவி—இடஒதுக்கீடு குறைவிடத்தை நிரப்புவது—இனச் சுழற்சி அடிப்படையில் நேரடி நியமனம்மூலம் நிரப்புதல்—ஆணை— வெளியிடப்படுகிறது. 38

**வருவாய்த் துறை**

ஆட்சி எல்லை—திருவண்ணாமலை மாவட்டம் தற்போதைய போளூர் வட்டத்தை பிரித்து கலசப்பாக்கத்தை தலைமையிடமாக கொண்டு புதிய கலசப்பாக்கம் வட்டம் உருவாக்குதல்—ஆணை வெளியிடப்படுகிறது. .. .. .. 39–45

## NOTIFICATIONS BY GOVERNMENT

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

*தலைமைச் செயலகம், 2012 ஆகஸ்ட் 8*

**[பணிக்குழு—தொழிலாளர் துறை—தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி—முத்திரைக் கொல்லர் பதவி—இடஒதுக்கீடு குறைவிடத்தை நிரப்புவது—இனச் சுழற்சி அடிப்படையில் நேரடி நியமனம்மூலம் நிரப்புதல்—ஆணை— வெளியிடப்படுகிறது.]**

No. II(1)/LE/17/2012.

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:—

*[அரசாணை (நிலை) எண் 90 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (இ1)த் துறை, 8 ஜூன் 2012.]*

**படிக்கப்பட்டது:**

(1) தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண் ஜி2/26728/2006, நாள் : 23–05–2007 மற்றும் 6–8–2007

(2) தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண் ஜி2/41530/2007, நாள்: 11–01–2011.

**ஆணை: [அரசாணை (நிலை) எண் 90, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (இ1)த் துறை, 8 ஜூன் 2012.]**

தொழிலாளர் ஆணையர் தனது கடிதத்தில், அரசாணை எண் 44, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 20–05–1998–ன்படி முத்திரைக் கொல்லர் பதவியில் இட ஒதுக்கீட்டில் குறைந்த அளவு (Short fall) ஒன்று உள்ளதாக குறிப்பிட்டு அப்பணியிடத்தை நேரடி நியமனம்மூலம் நிரப்பிட அவ்வலுவலக 23–05–2007 மற்றும் 06–08–2007 நாளிட்ட கடிதங்களின் மூலம் அரசின் அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பப்பட்டது என்றும், பணி நியமனத்திற்கான தடையாணை தற்போது அரசினால் விலக்கிக் கொள்ளப்பட்டமையாலும், இட ஒதுக்கீட்டின்படி பட்டியல் பழங்குடியினர் வகுப்பில் குறைவிடத்தை மேற்படி அரசாணையின் அடிப்படையில் சரிசெய்ய வேண்டிய அவசியத்தினாலும் நேரடி நியமனத்தின்மூலம் முத்திரைக் கொல்லர் பதவியில் ஒருவரை மேற்படி வகுப்பில் நிரப்பினால் மட்டுமே, குறைவிடத்தை சரிசெய்ய இயலும் என்றும், எனவே 19–03–2007 முதல் பவானி முத்திரை ஆய்வர் அலுவலகத்தில் காலியாக உள்ள முத்திரைக் கொல்லர் பதவியினை பழங்குடியினர் பட்டியல் வகுப்பில் இருந்து (ST) சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பகத்தின்மூலம் பட்டியல் பெற்று நியமன அலுவலர் என்ற முறையில் கோவை தொழிலாளர் இணை ஆணையர் நியமனம் செய்ய அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலும், அரசாணை (நிலை) எண் 162, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 21–09–1999–ன்படி ஒன்றுக்கு மேற்பட்ட பணியிடங்கள் உள்ள பதவிகளுக்கு நேரடி நியமனத்தின்போது இட ஒதுக்கீடு விதியை பின்பற்ற வேண்டும் என்பதை தெரிவித்து, முத்திரைக் கொல்லர் பதவியில் சிறப்பு விதிகளில் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. இடஒதுக்கீடு விதியை•பின்பற்ற வேண்டுமானால் இனச்சுழற்சி நியமனம் (Reservation of Appointment) செய்யப்பட வேண்டும். தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளின் சிறப்பு விதிகளில் வகுப்பு XXII, விதி 8–ல் 4 வகைபாடுகளுக்கு (Record Clerks, Binder, Preservation Clerks, Craft Attenders) இனச் சுழற்சி அடிப்படையில் நியமனம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், முத்திரைக் கொல்லர் பதவியில் இனச் சுழற்சி நியமனம் செய்ய அறிவுரைகள் ஏதும் வழங்கப்படவில்லை. எனவே, முத்திரைக் கொல்லர் பதவியில் நேரடி நியமனம் செய்ய ஏதுவாக, இட ஒதுக்கீடு முறை பின்பற்ற தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளின் வகுப்பு XXII–க்கான சிறப்பு விதிகள் 8–ல் இனச்சுழற்சி நியமனம் (Reservation of Appointment) தொடர்பானதில் வகைப்பாடு 8 (Category-8) முத்திரைக் கொல்லர் இனமும் சேர்த்துக் கொள்ள உரிய விதித்திருத்தம் வழங்குமாறு தொழிலாளர் ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.”

3. தொழிலாளர் ஆணையரின் மேற்படி கருத்துருவினை கவனமாகப் பரிசீலித்தபின், தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளின் வகுப்பு XXII-க்கான சிறப்பு விதிகள் 8–ல் இனச்சுழற்சி நியமனம் (Reservation of Appointment) தொடர்பான வகைப்பாடு 8–ல் (Category-8) முத்திரைக் கொல்லர் பதவியையும் சேர்ப்பதற்கு அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இப்பொருள் குறித்த உரிய விதித்திருத்தம் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையால் தனியே வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**மோகன் பியாரே,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

## வருவாய்த் துறை

*தலைமைச் செயலகம், 2012 ஆகஸ்ட் 8*

**[ஆட்சி எல்லை-திருவண்ணாமலை மாவட்டம் தற்போதைய போளூர் வட்டத்தை பிரித்து கலசப்பாக்கத்தை தலைமையிடமாக கொண்டு புதிய கலசப்பாக்கம் வட்டம் உருவாக்குதல்—ஆணை வெளியிடப்படுகிறது.]**

No. II(1)/REV/18/2012.

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:-

*[அரசாணை (நிலை) எண் 257, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 11 ஜூலை 2012.]*

**படிக்கவும்:**

(1) மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை கடித எண் எம் 2/33810/2011, நாள்: 27—9—2011.

(2) மு.செ/வ.நி ஆணையரின் நே.மு.க. எண் 6(4)/50528/2011, நாள்: 12—10—2011.

**ஆணை: [அரசாணை (நிலை) எண் 257, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 11 ஜூலை 2012.]**

கால விரையமின்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும் வட்டாட்சியர் அலுவலகம் திறம்பட செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 08—05—2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110 இன்கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

**"திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டத்தைப் பிரித்து புதிய கலசப்பாக்கம் வட்டம் தோற்றுவிக்கப்படும்."**

*2.* மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர், முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து புதிய கலசப்பாக்கம் வட்டம் உருவாக்குவது தொடர்பான முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளது.

*3.* திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் மொத்தமுள்ள 9 குறுவட்டங்களில் 3 குறுவட்டங்களான கலசப்பாக்கம், கடலாடி, கேட்டவரம்பாளையம் ஆகிய உள்வட்டங்களை உள்ளடக்கி கலசப்பாக்கம் என்ற வட்டம் உருவாக்கலாம் என்ற மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையை ஏற்று புதிய கலசப்பாக்கம் வட்டம் அமைப்பது குறித்த அறிக்கையை முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அரசுக்கு கீழ்க்கண்டவாறு அனுப்பியுள்ளார்.

*(i)* புதிய கலசப்பாக்கம் வட்டத்தில் கீழ்க்கண்டவாறு உள்வட்டங்கள் மற்றும் கிராமங்கள் அமையும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

| | *போளூர் தற்போது உள்ளபடி* | | *உத்தேசிக்கப்பட்ட வட்டம்* | | *எஞ்சிய போளூர்வட்டம்.* | |
|---|---|---|---|---|---|---|
| உள்வட்டங்களின் | சந்தவாசல் | 25 | கலசப்பாக்கம் | 22 | சந்தவாசல் | 25 |
| எண்ணிக்கை | கேளூர் | 28 | கடலாடி | 14 | கேளூர் | 28 |
| பெயருடன் | போளூர் | 20 | கேட்டவரம்பாளையம் | 16 | போளூர் | 20 |
| | கலசப்பாக்கம் | 22 | | 52 | மண்டக்குளத்தூர் | 25 |
| | கடலாடி | 14 | | | மொடையூர் | 24 |
| | கேட்டவரம்பாளையம் | 16 | | | தச்சாம்பாடி | 14 |
| | மண்டக்குளத்தூர் | 25 | | | | 136 |
| | மொடையூர் | 24 | | | | |
| | தச்சாம்பாடி | 14 | | | | |
| | | 188 | | | | |

மேலும், வட்டம் பிரித்தலுக்கான அரசாணை எண் 279, வருவாய்த் துறை, நாள்: 09—06—2000—ன் படி புதிய வட்டம் உருவாக்க நிர்ணயித்துள்ள அளவுகோல்களான பரப்பளவு, மக்கள்தொகை மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை நிறைவு செய்துள்ளதாலும், புதிய கலசப்பாக்கம் வட்டம் உருவாக்கப்படுவதால் ஒன்றிய எல்லைகளோ, சட்டமன்ற தொகுதி ஆளுகையோ எவ்வித மாற்றத்திற்கும் உட்படவில்லை என்பதாலும், போளூர் வட்டத்தில் மொத்தமுள்ள 9 குறுவட்டங்களில் 3 குறுவட்டங்களான கலசப்பாக்கம், கடலாடி, கேட்டவரம்பாளையம் ஆகிய உள்வட்டங்களை உள்ளடக்கி கலசப்பாக்கம் என்ற வட்டம் உருவாக்கலாம் என மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

*(ii)* புதிய வட்டம் அமைக்க அரசாணை எண் 279, வருவாய்த் துறை நாள்: 09—06—2003—ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போது உள்ளபடி | உத்தேச பிரிவினைக்கு பின் வட்டம் | |
|---|---|---|---|---|
| | | போளூர் | உத்தேசிக்கப்பட்ட வட்டம். கலசப்பாக்கம் | எஞ்சியவட்டம் போளூர் |
| 1. | தலைமையிடம் | போளூர் | கலசப்பாக்கம் | போளூர் |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ.) | 831 ச.கி.மீ. | 259 ச.கி.மீ. | 572 ச.கி.மீ. |
| 3. | மக்கள் தொகை | 457785 | 140301 | 317484 |
| 4. | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 5. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | போளூர் கலசப்பாக்கம் | கலசப்பாக்கம் | போளூர் கலசப்பாக்கம் (ஒரு பகுதி மட்டும்) |
| 6. | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 7. | நகராட்சி எண்ணிக்கை/பெயர் | – | – | – |
| 8. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை/பெயர் | போளூர் சேத்துப்பட்டு கலசப்பாக்கம் ஜமுனா மரத்தூர் | கலசப்பாக்கம் ஜமுனா மரத்தூர் (ஒரு பகுதி மட்டும்) | போளூர் சேத்துப்பட்டு ஜமுனா மரத்தூர் (ஒரு பகுதி மட்டும்) |
| 9. | சிறப்பு பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை/ பெயர் | போளூர், களம்பூர் சேத்துப்பட்டு | – | போளூர், களம்பூர் சேத்துப்பட்டு |
| 10. | குறு வட்டங்களின் எண்ணிக்கை/ பெயர் | சந்தவாசல் 25<br>கேளூர் 28<br>போளூர் 20<br>கலசப்பாக்கம் 22<br>கடலாடி 14<br>கேட்டவரம்பாளையம் 16<br>மண்டக்குளத்தூர் 25<br>மொடையூர் 24<br>தச்சாம்பாடி 14<br>188 | கலசப்பாக்கம் 22<br>கடலாடி 14<br>கேட்டவரம்பாளையம் 16<br>52 | சந்தவாசல் 25<br>கேளூர் 28<br>போளூர் 20<br>மண்டக்குளத்தூர் 25<br>மொடையூர் 24<br>தச்சாம்பாடி 14<br>136 |
| 11. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 188 | 52 | 136 |
| 12. | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | 145 | 45 | 100 |
| 13. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராம பெயர்/தூரம் | கீழ்தட்டியாம்பட்டு 67 கீ.மீ. | கீழ்தட்டியாம்பட்டி 35 கீ.மீ. | – |

(*iii*) புதிய கலசப்பாக்கம் வட்டத்திற்கான பணியிட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| *வ.எண்.* | *பணியிடத்தின் பெயர்* | *போளூர் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள்* | *போளூர் வட்டத்தில் நிறுத்தி வைக்கப்படவேண்டிய பணியிடங்கள்* | *கலசப்பாக்கம் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள்* | *கலசப்பாக்கம் வட்டத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள்* | *அனுமதிக்க வேண்டிய மொத்தப் பணியிடங்கள்* |
|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* |
| | | | **பொதுப்பிரிவு (அ)** | | | |
| 1. | வட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2. | தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/மண்டல துணை வட்டாட்சியர் | 5 | 3 | 2 | – | 2 |
| 3. | வருவாய் உதவியாளர் (வருவாய் ஆய்வாளர் உட்பட) | 17 | 10 | 7 | – | 7 |
| 4. | இளநிலை உதவியாளர் | 8 | 5 | 3 | – | 3 |
| 5. | தட்டச்சர் | 2 | 1 | 1 | – | 1 |

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | போளூர் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | போளூர் வட்டத்தில் நிறுத்தி வைக்கப்படவேண்டிய பணியிடங்கள் | கலசப்பாக்கம் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | கலசப்பாக்கம் வட்டத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | அனுமதிக்க வேண்டிய மொத்தப் பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 6. | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | – | 1 | 1 |
| 7. | பதிவுறு எழுத்தர் | 2 | 1 | 1 | – | 1 |
| 8. | அலுவலக உதவியாளர் | 10 | 6 | 4 | – | 4 |
| 9. | இரவு காவலர் | 1 | 1 | – | 1 | 1 |
| 10. | மசால்ஜி | 1 | 1 | – | 1 | 1 |
| | மொத்தம்: | 48 | 30 | 18 | 4 | 22 |
| | **சமூக பாதுகாப்புத்திட்டம் (ஆ)** | | | | | |
| 1. | தனிவட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2. | துணை வட்டாட்சியர் | 1 | 1 | – | – | – |
| 3. | உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 4. | இளநிலை உதவியாளர் | 3 | 2 | 1 | – | 1 |
| 5. | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | – | 1 | 1 |
| | மொத்தம்: | 7 | 6 | 1 | 3 | 4 |
| | **தேர்தல் பிரிவு (இ)** | | | | | |
| 1. | துணை வட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2. | வருவாய் உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 3. | வருவாய் இளநிலை உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| | மொத்தம்: | 3 | 3 | – | 3 | 3 |
| | **வட்ட வழங்கல் பிரிவு (ஈ)** | | | | | |
| 1. | வட்ட வழங்கல் அலுவலர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2. | வருவாய் உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 3. | வருவாய் இளநிலை உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 4. | தனிவருவாய் ஆய்வாளர் | 3 | 2 | 1 | – | 1 |
| 5. | அலுவலக உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| | மொத்தம்: | 7 | 6 | 1 | 4 | 5 |
| | **அ+ஆ+இ+ஈ** | 65 | 45 | 20 | 14 | 34 |
| | **நில அளவைப் பிரிவு (உ)** | | | | | |
| 1. | துணை ஆய்வாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2. | வட்ட சார் ஆய்வாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 3. | முதுநிலை வரைவாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 4. | வட்ட வரைவாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 5. | குறுவட்ட அளவர் | 9 | 6 | 3 | – | 3 |
| 6. | புல உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| | மொத்தம்: | 14 | 11 | 3 | 5 | 8 |

(*iv*) மேலே விவரித்தவாறு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையை ஏற்று, புதிய கலசப்பாக்கம் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு 34 பணியிடங்களும் (போளூர் வட்டத்திலிருந்து மாற்றம் 20 பணியிடங்கள் + புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய 14 பணியிடங்கள்) நிலஅளவைப் பிரிவிற்கு 8 பணியிடங்கள் (போளூர் வட்டத்திலிருந்து மாற்றம் 3 பணியிடங்கள் + புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய 5 பணியிடங்கள்) உருவாக்கலாம் என்றும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(*v*) மேலும் புதிய கலசப்பாக்கம் வட்டத்திற்கு வருடத்திற்கு தோராயமாக தொடரும் மற்றும் தொடரா செலவினம் கீழ்க்கண்டவாறு ஆகும் எனத் தெரிவித்துள்ளார்.

**I. தொடரும் செலவினங்கள்:**

| *வ.எண்* (1) | *விவரம்* (2) | *தொகை (ரூ.)* (3) |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் ஊதியம் (ம) படிகள் (ஆண்டொன்றுக்கு) | 1,30,88,676 |
| 2. | வாடகை | 1,44,000 (12,000x12) |
| 3. | மின்சாரக் கட்டணம் | 1,20,000 (20,000x6 mths) |
| 4. | எரிபொருள் (டீசல்) | 1,68.000 (140லிxரூ.50x12 மாதங்கள்x2 ஈப்புக்கு) |
| 5. | தொலைபேசி கட்டணம் | 25,500 (4,250x6 மாதங்களுக்கு) |
| | மொத்தம் | 1,35,46,176 |

**II தொடரா செலவினங்கள்:**

| *வ.எண்* | *விவரம்* | *எண்ணிக்கை* | *தொகை* |
|---|---|---|---|
| 1. | அலுவலக கட்டிடம் | 1 | 2,02,86,000 |
| 2. | வட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 19,32,000 |
| 3. | தளவாடங்கள் | – | 6,07,300 |
| 4. | ஈப்பு | 2 (ஒன்றிற்கு 5,56,000) | 11,12,000 |
| 5. | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 6. | கணினி | 3 | 75,000 |
| 7. | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 3 | 25,000 |
| 8. | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 | 65,000 |
| 9. | பேக்ஸ் | 1 | 10,000 |
| 10. | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 11. | தீயணைப்பான் | 2 | 10,000 |
| | மொத்தம் .. | – | 2,41,53,300 |

4. முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(*i*) அரசாணை (நிலை) எண் 279, வருவாய், நாள் 09–06–2003–இல் புதிய கோட்டம் உருவாக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவுகோல்களில் புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கலசப்பாக்கம் வட்டம் பரப்பளவு, மக்கள்தொகை, வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் குறுவட்டங்களின் எண்ணிக்கை நிறைவு செய்வதன் அடிப்படையில், இணைப்பு–1–இல் கண்டுள்ளவாறு புதிய கலசப்பாக்கம் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(*ii*) புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்படும் கலசப்பாக்கம் வட்டத்திற்கு போளூர் வட்டத்திலிருந்து மறுபணிபரவலமர்த்தல் மூலம் 23 பணியிடங்களும் மற்றும் புதியதாக தோற்றுவித்தல் மூலம் 19 பணியிடங்கள் ஆக மொத்தம் 42 பணியிடங்கள் மேலே பத்தி 3 (iii) இல் கண்டுள்ளவாறு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(*iii*) புதியதாக உருவாக்கப்படும் கலசப்பாக்கம் வட்டத்திற்கு புதிதாக 19 பணியிடங்கள் வெவ்வேறு நிலைகளில் தோற்றுவிக்கப்படுவதால் தொடரும் செலவினமாக ஆண்டுக்கு ரூ. 1,35,46,176/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தைந்து லட்சத்து நாற்பத்தாறாயிரத்து நூற்று எழுபத்தி ஆறு மட்டும்)–க்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(*iv*) புதியதாக உருவாக்கப்படும் கலசப்பாக்கம் வட்டத்திற்கு தொடராச் செலவினமாக ரூ.2,41,53,300/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தொன்று லட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்)–க்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

**5.** மேலே பத்தி 4 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**(அ) பணியாளர் சம்பளங்கள் ரூ. 1,30,88,676/—**

(i) வருவாய் பணியிடங்கள்:-

**2053 00**-மாவட்ட நிருவாகம்-**094** ஏனைய பணியாளரமைப்பு-I திட்டத்தில் சேராதது AB-வட்டப் பணியாளரமைப்புகள்-**01** சம்பளங்கள்
(த.தொ.கு: **2053-00-094**-AB-**0102)**

(ii) நில அளவைப் பணியிடங்கள்:-
**2029 00**-நில வருவாய்-**102** நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள்-I திட்டத்தில் சேராதது AG-மாவட்ட நில அளவை நிருவாகம்-**01** சம்பளங்கள்
(த.தொ.கு: **2029-00-102**-AG-**0103)**

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள்:-
**3456 00**-குடிமைப் பொருள் -**001** நெறிப்படுத்துதலும் நிருவாகமும்-I திட்டத்தில் சேராதது AB-வட்டப் பணியாளர் அமைப்பு-**01** சம்பளங்கள்
(த.தொ.கு: **3456**-**00**-**001**-AB-**0108)**

(ஆ) **05** அலுவலக செலவுகள் **01** தொலைப்பேசி கட்டணங்கள் ரூ.**31,500**/-
தொடரும் செலவினம் ரூ. **25,500/—** மற்றும் தொடராச் செலவினம் ரூ.**6,000/—**
(த.தொ.கு: 2053-00-094-AB-0513)

(இ) **05** அலுவலக செலவுகள் **03** மின் கட்டணங்கள் ரூ.**1,20,000**/-
(த.தொ.கு: 2053-00-094-AB-0531)

(ஈ) **05 05** அறைகலன் ரூ.**6,07,300**/-
**05** அலுவலகச் செலவுகள் **05** அறைகலன்
(த.தொ.கு: 2053-00-094-AB-0559)

(உ) **06** வாடகை கட்டணம் வீதங்கள், வரிகள் **01** வாடகை ரூ.**1,44,000**/-
தொடரும் செலவினம்
(த.தொ.கு: 2053-00-094-AB-0611)

(ஊ) **19** இயந்திரமும், சாதனமும் **01** வாங்குதல் ரூ.**1,10,000**/-
(த.தொ.கு: 2053-00-094-AB-1914)

(எ) **21** மோட்டார் வண்டிகள் **01** வாங்குதல் ரூ.**11,12,000**/-
(த.தொ.கு: 2053-00-094-AB-2119)

(ஏ) **45** பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் ரூ.**1,68,000**/-
(த.தொ.கு: 2053-00-094-AB-4500)

(ஐ) **76** கணினியும் துணை பாகங்களும் **01** வாங்குதல் ரூ.**1,00,000**/-
(த.தொ.கு: 2053-00-094-AB-7614)

(ஒ) அலுவலகக் கட்டடம் ரூ. **2,02,86,000**/-
**4059** பொதுப்பணிகள் குறித்த மூலதனச்செலவு-**01** அலுவலகக் கட்டடங்கள்-**051** கட்டுமானம்-பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள்-II மாநிலத் திட்டம் நிலவரி-**16** பெரும்பணிகள்
(த.தொ.கு: 4059-01-051-JC-1609)

(ஓ) வட்டாட்சியர் குடியிருப்பு:- ரூ.**19,32,000**/-
**4216**-வீட்டுவசதி குறித்த மூலதனச்செலவு-**01** அரசு குடியிருப்பு கட்டடங்கள்-**106** பொது தொகுப்பு இடவசதி**—** பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள்-II மாநிலத் திட்டம்-JC வருவாய்த் துறை**—**வீட்டுவசதித் திட்டங்கள் **16** பெரும்பணிகள்
(த.தொ.கு: 4216-01-106-JC-1601)

**6.** மேலே பத்தி **4—**இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு துணை புதுப்பணித் திட்டமாகும் (New Instrument of Services), இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை-**5** அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை **2012—2013** துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது./வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4 இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இந்த அரசாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண் 39768/சி.எம்.பி.சி/2012, நாள் 11-07-2012—இல் இசைவுடன் வெளியிடப்படுகிறது. [கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 641 (அறுநூற்று நாற்பத்தொன்று)].

(ஆளுநரின் ஆணைப்படி)

**ரமேஷ்ராம் மிஸ்ரா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**இணைப்பு-I**

*[அரசாணை (நிலை) எண் 257, வருவாய், நாள்: 11–07–2012.]*

அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போதைய போளூர் வட்டத்தைப் பிரித்து கீழ்க்கண்ட மூன்று குறுவட்டங்களை உள்ளடக்கி கலசப்பாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கலசப்பாக்கம் வட்டம் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01 ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

**2.** புதிதாக உருவாக்கப்படும் கலசப்பாக்கம் வட்டத்தில் உள்ளடங்கும் குறுவட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது போளூர் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி கலசப்பாக்கம் வட்டாட்சியரால் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**அட்டவணை**

| *வ. எண்* (1) | *வட்டத்தின் பெயர்* (2) | *குறுவட்டங்களின் பெயர்* (3) |
|---|---|---|
| 1 | கலசப்பாக்கம் | கலசப்பாக்கம்<br>கடலாடி<br>கேட்டவரம்பாளையம் |

**இணைப்பு—II**

*[அரசாணை (நிலை) எண் 257, வருவாய், நாள் : 11 ஜூலை 2012.]*

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *கலசப்பாக்கம் வட்டத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டியப் பணியிடங்கள்* | *அடிப்படை ஊதியம் + தர ஊதியம்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1. | வட்ட வழங்கல் அலுவலர் | 1 | 9300—34800+GP 4900 |
| 2. | வட்டாட்சியர் | 1 | 9300—34800+GP 4900 |
| 3. | தனிவட்டாட்சியர் | 1 | 9300—34800+GP 4900 |
| 4. | துணை வட்டாட்சியர் | 1 | 9300—34800+GP 4800 |
| 5. | துணை ஆய்வாளர் | 1 | 9300—34800+GP 4300 |
| 6. | முதுநிலை வரைவாளர் | 1 | 9300—34800+GP 4200 |
| 7. | வட்ட சார் ஆய்வாளர் | 1 | 9300—34800+GP 4200 |
| 8. | உதவியாளர் | 1 | 5200—20200+GP 2800 |
| 9. | வருவாய் உதவியாளர் (தேர்தல் பிரிவு) | 1 | 5200—20200+GP 2800 |
| 10. | வருவாய் உதவியாளர் (வட்ட வழங்கல் பிரிவு) | 1 | 5200—20200+GP 2800 |
| 11. | வட்ட வரைவாளர் | 1 | 5200—20200+GP 2800 |
| 12. | வருவாய் இளநிலை உதவியாளர் (தேர்தல் பிரிவு) | 1 | 5200—20200+GP 2400 |

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | கலசப்பாக்கம் வட்டத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டியப் பணியிடங்கள் | அடிப்படை ஊதியம் + தர ஊதியம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 13. | வருவாய் இளநிலை உதவியாளர் (வட்ட வழங்கல் பிரிவு) | 1 | 5200–20200+GP 2400 |
| 14. | ஈப்பு ஓட்டுநர் (பொதுப் பிரிவு) | 1 | 5200–20200+GP 2400 |
| 15. | ஈப்பு ஓட்டுநர் (சமூக பாதுகாப்பு திட்டம்) | 1 | 5200–20200+GP 2400 |
| 16. | புல உதவியாளர் | 1 | 4800–10000+GP 1300 |
| 17. | அலுவலக உதவியாளர் | 1 | 4800–10000+GP 1300 |
| 18. | இரவு காவலர் | 1 | 4800–10000+GP 1300 |
| 19. | மசால்ஜி | 1 | 4800–10000+GP 1300 |
| | மொத்தம் .. | 19 | |

**இணைப்பு–III**

*[அரசாணை (நிலை) எண் 257, வருவாய், நாள் : 11 ஜூலை 2012.]*

**I. தொடரும் செலவினங்கள்:**

| வ.எண். | விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பணியாளர்களின் ஊதியம் (ம) படிகள் (ஆண்டொன்றுக்கு) | 1,30,88,676 |
| 2. | வாடகை | 1,44,000 (12,000x12) |
| 3. | மின்சாரக் கட்டணம் | 1,20,000 (20,000x6 மாதங்கள்) |
| 4. | எரிபொருள் (டீசல்) | 1,68,000 |
| 5. | தொலைபேசி கட்டணம் | 25,500 |
| | **மொத்தம்** .. | 1,35,46,176 |

**II. தொடரா செலவினங்கள்:**

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | அலுவலக கட்டிடம் | 1 | 2,02,86,000 |
| 2 | வட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 19,32,000 |
| 3 | தளவாடங்கள் | – | 6,07,300 |
| 4 | ஈப்பு | 2 (ஒன்றிற்கு 5,56,000) | 11,12,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 6 | கணினி | 3 | 75,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 3 | 25,000 |
| 8 | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 | 65,000 |
| 9 | பேக்ஸ் | 1 | 10,000 |
| 10 | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 11 | தீயணைப்பான் | 2 | 10,000 |
| | **மொத்தம்** .. | – | **2,41,53,300** |

**ரமேஷ்ராம் மிஸ்ரா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU